DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | பூங்கொடி (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 05.08.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் அலங்காநத்தத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரி எனது மருமகன், 2 மற்றும் 3வது எதிரிகள் எனது சம்மந்திகள் ஆவார்கள். **(**சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்**.)**

எனது மகள் சாட்சி 2 விசித்ராவை ஆஜர் 1வது எதிரிக்கு கல்யாணம் செய்துகொடுத்தோம். இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் எனது மகள் என் வீட்டிற்கு வந்துவிட்டார். ஆஜர் 1வது எதிரி விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். 10.02.2021ம் தேதி எனது மகளை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்வதற்காக போடிநாயக்கன்பட்டியில் இருக்கும் காட்டில் இருந்து வீட்டிற்கு வருவதற்காக சைக்கிளில் ஆஜர் எதிரிகளின் தோட்டத்திற்கு செல்லும் பாதை வழியாக வந்துகொண்டிருந்தேன்.

ஆஜர் எதிரிகள் அவர்களின் வயலில் பூப்பறித்து கொண்டிருந்தார்கள். என்னை பார்த்ததும் அவர்கள் என்னிடம் வந்து எதற்காக கோர்ட்டுக்கு போகிறாய் நீ போகவில்லை என்றால் என் மகனுக்கு ஆதரவாக தீர்ப்பு வரும் நாங்கள் வேறு கல்யாணம்

செய்துவைக்கவேண்டும் என்று தேவடியா நாதேரி கண்டாரஓலி என்று கூறி பிரச்சனை செய்தார்கள். ஆஜர் எதிரி ஆனந்த் கையால் எனது முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். ஆஜர் எதிரி மலர்கொடி எனது தலைமுடியை பிடித்து சுத்தி கீழே தள்ளினார். ஆஜர் எதிரிகள் மூன்றுபேரும் சேர்ந்த என்னை கையால் அடித்து காலால் உதைத்தார்கள். ஆஜர் எதிரி ராஜா என்னிடம் காண்பிக்கப்படும் மம்பட்டி புடியால் எனது வலதுகாலில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். **(**மம்முட்டி புடி அ**.**சா**.**பொ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** மூன்று பேரும் என்னிடம் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறினார்கள். **(**சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்**.)** பின்னர் ஆஜர் எதிரிகள் அங்கு இருந்து சென்றுவிட்டார்கள்.

நான் எனது மகள் விசித்ராவுடன் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாமக்கல்லுக்கு எதற்காக சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பாதையில் சென்றேன் என்றால் எனது மகள் அலங்காநத்தத்தில் எனது அம்மா வீட்டில் இருந்தார். அலங்காநத்தத்தில் உள்ள எனது அம்மா வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1/2 கி.மீ. தூரம் இருக்கும். எதிரிகள் என்னை அடித்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது மகள் எனது அம்மா வீட்டில் தான் இருந்தாரா என்றால் எனது அம்மா வீட்டில்தான் இருந்தார். யார் தகவல் சொன்னதன் அடிப்படையில் எனது மகள் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் எனது பெரியம்மா ஆஜர் எதிரிகள் என்னை அடித்த தகவலை எனது மகளிடம் சென்றுகூற எனது மகள் சம்பவ இடத்திற்கு வந்துகொண்டிருந்தார் அப்போது நானும் எனது அம்மா வீட்டைநோக்கி சென்றேன். வழியில் சந்தித்து என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு எத்தனை நாட்கள் கழித்து என்னிடம் போலிசார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து வந்தார்கள். வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விபரத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆம் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். நான் எனது முதல் விசாரணையில் சொன்ன

சங்கதிகளை தான் போலிசாரிடமும் கூறினேன் என்றால் சரிதான். சம்பவத்தில் எனக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் சம்மந்தமாக என் மீதும் எதிரிகள் புகார்கொடுத்து அது எருமப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.159/2021 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். போலிசாரிடம் அ.சா.பொ.1ஐ நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுவிட்டு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தில் கைப்பற்றியுள்ளனர். நான் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 5 நாட்கள் இருந்தேன். எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் இடையே விவாகரத்து எற்பட்ட விபரம் நாளதுவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகள் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றாலும் நான் தான் எதிரிகளிடம் பிரச்சனை செய்துவிட்டு அதன் பேரில் எதிரிகள் என் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக வேண்டி இந்த புகாரினை எதிரிகள் மீதுகொடுத்துவிட்டு அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **(**சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்**.)**

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**